மூவர் அருளிச்செய்த
தேவாரத் திரட்டு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



மூவர் அருளிச்செய்த,

தேவாரத்திரட்டு.

மாணிக்கவாசக சுவாமிகளருளிச்செய்த
திருவாசகமும் சேர்க்கப்பட்டுளது.

இவை

வீரவநல்லூர்,

உ. ரா. பாவனாசம்பிள்ளையால்.

தென்காசி, ஸ்ரீராமாநுஜம் பிரஸில்,
பதிப்பிக்கப் பெற்றது.

காப்பி 500.

1926 அணா 1.

உ

சிவமயம்

திருஞான சம்மந்த மூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள்

முதற்றிருமுறை

திருப்பிரமபுரம்–பண்–நட்டபாடை

திருச்சிற்றப்பலம்

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வ
னேடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே (1)

முற்றலாமை யிளநாகமோடேனமுளைக்கொம் பவைபூண்டு
வற்ற லோடுகலனுப்பலிதேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரி யார்கழல் கையாற்றொழுதேத்தப்'
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. (2)

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞான சம்பந்த னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. (11)

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரமென்பது–சீர்காழி

திருவண்ணாமலை – பண் – நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையா ளொடுமுடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித் திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணமறுமே. (1)

தேமாங்கனி கடுவன் கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
வாமாம்பிணை யணையும் பொழி லண்ணாமலை யண்ணல்
பூமான்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே. (2)

வெம்புந்திய கதிரோனொளி விலகும் விரிசார
லம்பூந்திமூ வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவகுளிர் காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

கோயில் – பண் – குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம் பிக்கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங் கண்முதல் வன்பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. (1)

பறப்பைப் படுத் தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே. (2)

ஞாலத்துயர் காழி ஞானசம் பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பல மேய
சூலப்படையானைச் சொன்ன தமிழ் மாலை
கோலத்தார் பாடவல்லார் நல்லாரே (11)

திருச்சிற்றம்பலம்

சீகாழி – பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர்பான் மலிந்தோங்கிய
சொல்லானைத்தொன் மதிற்காழியே கோயிலா
மில்லானை யேத்த நின்றார்க்குள தின்பமே. (1)

நம்மான மாற்றிநமக்கருளாய் நின்ற
பெம்மானைப் பேயுட னாடல் புரிந்தானை
யம்மானை யந்தணர் சேருமணிகாழி
யெம்மானையேத் தவல்லார்க்கிடரில்லையே (2)

கழியார் சீரோத மல்குங்கடற்காழியு
ளொழியாது கோயில் கொண்டானை யுகந்துள்கித்
தழியார் சொன்ஞான சம்பம்பந்தன் றமிழார
மொழிவார் கண்மூவுலகும் பெறுவாரே (10)

திருச்சிற்றம்பலம்

திருவேகம்பம் – பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மறையானை மாசிலாப்புன் சடைமல்குவெண்
பிறையானைப் பெண்ணோடாணாகிய பெம்மானை
யிறையானை யேர்கொள்கச் சித்திருவேகம்பத்
துறைவானை யல்லதுள்காதென துள்ளமே (1)

நொச்சியே வன்னி கொன்றைமதி கூவிள
முச்சியே புனைதல்வேடம் விடையூர்தியான்
கச்சியே கம்பமேயகறைக் கண்டனை
நச்சியே தொழுமினும் மேல்வினை நையுமே. (2)

அந்தண் பூங்கச்சியே கம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழி யூரன் கலிக்கோவையாற்
சந்தமேபாடவல்ல தமிழ்ஞானசம்
பந்தன் சொற்படிபாடக் கெடும்பாவமே (11)

திருச்சிற்றம்பலம்

திருச்சாய்க்காடு – பண் – சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்

மண்புகார்வான்புகுவர் மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார் கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டா வெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க் காட்டெந்தலைவன்றாள் சார்ந்தாரே (1)

போய்க்காடேமறைந்துறைதல் புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாக வுடையானும் விடையானும்
வாய்க்காடுமுதுமரமே யிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும் பெரியோர்கள்பெருமானே (2)

நொம்பைந்துபுடைத்தொல்கு நூபுரஞ்சேர்மெல்லடியா
ரம்பந்தும்வரிக்கழலு மரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப்பத்தினையு
மெம்பந்தமெனக்கருதி யேத்துவார்க்கிடர்கெடுமே (11)

திருச்சிற்றம்பலம்

திருவாலவாய் திருநீற்றுப் பதிகம்.

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான் றிருநீறே (1)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிரு வாலவாயான்றிரு நீறே (2)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே (3)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே (4)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த
தேவாரப்பதிகங்கள்
முதற்றிருமுறை.

திரு அதிகை வீரட்டானம் – பண் – கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியா துவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே (1)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பது கண்டறியேன் வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னை நலிவதனை நணுகாமற்றுரந்து கரந்துமிடு
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே. (2)

போர்த்தாயங்கோரானை யினீருரிதோல்புறங் காடரங்காநடமாடவல்லா
யார்த்தாரரக்கன்றனைமால்வரைக் கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா லென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே (10

திருச்சிற்றம்பலம்

திருஅங்கமாலை – பண் – சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையேநீவணங்காய், தலை–மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய் (1)

கண்காள்காண்மின்களோ, கடல்–நஞ்சுண்டகண்டன்றன்னை
யெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ (2)

செவிகாள்கேண்மின்களோ, சிவ–னெம்மிறைசெம்பவளம்
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ், செவிகாள்கேண்மின்களோ ()

மூக்கேநீமுரலாய், முது–காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய் (4)

வாயேவாழ்த்துகண்டாய், மத–யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்,னை வாயேவாழ்த்துகண்டாய். (5)

நெஞ்சேநீநினையாய், நிமிர்–புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய் (6)

உற்றாருளரோ, உயிர்-கொண்டுபோ
குற்றாலத்துறைகூத்தனல்லானமக், கு[illegible] (10)

தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே, தேடிக்கண்டுகொண்டேன் (12)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயப்பதிகம் – பண் – காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே (1)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங் கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே (2)

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே (3)

மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார் தமக்கிடுக்கணில்லையே (10)

திருச்சிற்றம்பலம்

கோயிற்றிருநேரிசை – பண் – கொல்லி

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனேபரமயோகீ
யெத்தினாற்பத்திசெய்கேனென்னை நீயிகழவேண்டா
முத்தனேமுதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல் காண்பானடியனேன் வந்தவாறே. (1)

கருத்தனாய்ப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தாலறியவொண்ணாத் திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே (2)

மண்ணுண்ட மாலவனுமலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம்விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்கதில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீயாடுமாறே (10)

திருச்சிற்றம்பலம்

தி... பபுலியூர்–திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமா யுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத் தகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன் பன்றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன்றன்னடி யோங்களுக்கே (1)

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவா திருக்கவரந்தா வேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்ததீவண்ணனே (8)

திருந்தாவமணர் தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம் புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுட னெரித்தாய்பா திரிப்புலியூர்
யிருந்தாயடியேனினிப்பிறவாமல வந்தேன்றுகொள்ளே (10)

திருச்சிற்றம்பலம்

திருப்புள்ளிருக்கும்–திருக்குருந்தொகை.

திருச்சிற்றம்பலம்

வெள்ளெருக்கரவம் விரவுஞ்சடைப்
புள்ளிருக்கும் வேளூரான்பொற்கழல்
உள்ளிருக்கு முணர்ச்சியில்லாதவர்
நள்ளிருப்பர்நரகக்குழியிலே. (1)

மாற்றமொன்றறியீர் மனைவாழ்க்கைபோய்க்
கூற்றம்வந்துமைக் கொள்வதன்முன்னமே
போற்றவல்லீரேற் புள்ளிருக்கும்வேளூர்
சீற்றமாயினதேய்ந் தறுங்காண்மினே (3)

கையினோடுகால்கட்டியுமரெலாம்
ஐயன்வீடின னென்பதன்முன்னநீர்
பொய்யிலரவான் புள்ளிருக்கும் வேளூர்
மையுலாவியகண்டனை வாழ்த்துமே (7)

அரக்கனார்தலைபத்துமழிதர
நெருக்கிமா மலர்ப்பாதநிறுவிய
பொருப்பனா ருறைபுள்ளிருக்கும் வேளூர்
விருப்பினாற் றொழுவார்வினை வீடுமே (10)

திருச்சிற்றம்பலம

கோயில் பெரிய திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

அரியானையந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையினகத்தானை யணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர் கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக் கலகந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (1)

கற்றானைக்கங்கை வார்சடையான் றன்னைக்
காவிரிசூழ்வலஞ் சுழியுங்கருதினானை
யற்றானையலர்ந்தார்க்கு மருள்செய்வானை
யாரூரும்புகுவானை யறிந்தோமன்றே
மற்றுருந்தன் னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் .பிறவாநாளே. (2)

வேறு.

அயனவனுமாலு மறியாவண்ண
மாரழலாய்நீண்டுகந்த வண்ணல்கண்டாய்,
துயரிலங்கைவேந்தன் றுலங்கவன்று
சோதிவிரலாலுற வைத்தான்கண்டாய்,
பெயரவர்க்குப்பேரருள் கள்செய்தான்கண்டாய்
பேரும்பெரும்படையோ டீந்தான்கண்டாய்,
மயருறுவல்வினைநோய் தீர்ப்பான்கண்டாய்
மறைக்காட்டுறையு மணாளன்றானே. (9)

திருச்சிற்றம்பலம்

திருவினா-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்தகண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தானவார் சடையனென்னிலல்லான்,
ஒப்புடையனல்ல னொருவனல்ல
னோரூரனல்ல னோருவமனில்லி,
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக்காணினல்லால்,
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக்காட்டொணாதே (10)

திருச்சிற்றம்பலம்

திருமறுமாற்றத்-திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங்குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்திலிடர்ப்படோ நடலையில்லோ,
மேமாப்போம்பிணியறியோம் பணிவோமல்லோ
மின்பமேயெந்நாளுந் துன்பமில்லை,
தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான
சங்கவெண்குழையோர் காதிற்,
கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சேவடி யிணையேகுறுகினோமே. (1)

நாவாரநம்பனையே பாடப்பெற்றோ
நாணற்றார்நள்ளாமே விள்ளப்பெற்றோ,
மாவாரவென்றெமையாள்வானமரற்காத
னயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட,
தேவாதிதேவன் சிவனென்சிந்தை
சேர்ந்திருந்தான்றென்றிசைக் கோன்றானேவந்து,
கோவாடிக்குற்றேவல் செய்கென்றாலுங்
குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே. (10)

திருச்சிற்றம்பலம்

௨

சிவமயம்

நம்பியாரூரரென்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்.

திருவெண்ணெய் நல்லூர்ப்பதிகம்-ட.ண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதே நினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்ப்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே (1)

நாயேன்பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன் பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. (2)

காரூர்புனலெய்திக்கரை கல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ் பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்கா ளல்லேனெனலாமே. (10)

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டத்தொகை-பண்-கொல்லிக் கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழந்தணர் தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்,
இல்லையேயென்னாத இயற்பகைக்குமடியேன்
இளையான்றன்குடி மாறனடியார்க்குமடியேன்,
வெல்லுமாமிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார் விறன்மிண்டர்க்கடியேன்,
அல்லிமென்முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (1)

இலைமலிந்தவேல்நம்பி யெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்ற னடியார்க்குமடியேன்,
கலைமலிந்தசீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்,
மலைமலிந்ததோள்வள்ளல் மானக்கஞ்சாற
னெஞ்சாதவாட்டாய னடியார்க்குமடியேன்,
அலைமலிந்தபுனல்மங்கை யானாயர்க்கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே. (2)

திருச்சிற்றம்பலம்

திருக்கேதாரம் – பண் – நட்டபாஷை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்; பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான் றிருக்கேதாரமெனீரே. (1)

வாளோடியதடங்கண்ணியர் வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர் நணுகாமுனநணுகி
யாளாயும்மினடி கட்கிடமதுவேயெனிலிதுவே
கீளோடரவசைத்தா னிடங்கேதாரமெனீரே. (5)

திருச்சிற்றம்பலம்

திருநொடித்தான்மலை – பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான தறிந்துதன்பொன்னடிக்கே
நானென பாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தானொடித்தான் மலையுத்தமனே (1)

வாழ்வையுகந்தநெஞ்சமடவார் தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையது மாற்றியமரொல்லாஞ்
சூழவருள்புரிந்து தொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தா னொடித்தான்மலையுத்தமனே. (2)

ஊழிதோறூழிமுற்றுமுயர் பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின் சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந் தேத்தியபத்திவையு
மாழிகடலரையா வஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (10)

———

திருச்சிற்றம்பலம்

உ

கணபதிதுணை

மாணிக்கவாசக சுவாமிகளருளிச்செய்த

திருவாசகம்.

———

சிவபுராணம்

சிவனதநாதிமுறைமையான பழமை

திருப்பெருந்துறையி லருளிச் செய்யப்பட்டது.

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான்றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
சொல்லற் கரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர்சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப்பணிந்து

———

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை

சத்தியை வியந்தது

திருவண்ணாமலையி லருளிச் செய்யப்பட்டது.

வெண்டளையான்வந்த இயற்ற வினைக்கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்
சோதியையாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனுமாகாள் கிடந்தாளென்னே யென்னே
யீதேயெந் தோழிபரிசேலோ ரெம்பாவாய் (1)

———

திருச்சிற்றம்பலம்

ஆனந்தகளிப்பு.

திருவண்ணாமலையிலருளிச் செய்யப்பட்டது

ஒப்புமை பற்றிவந்தவாறடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம் பூதலத்தேபோந்தருளி
மெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத் தென்னன்பெருந்துறையா
னங்கண னந்தணனாயறை கூவி வீடருளு
மங்கருணைவார்கழலே பாடுதுங்காணம்மானாய் (1)

திருச்சிற்றம்பலம்

தில்லையிலருளிச் செய்யப்பட்டது

திருச்சிற்றம்பலம்

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான் மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான்சாழலோ. (1)

என்னப்பனெம்பிரா னெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்க்கோவணமாக் கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண் மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச் சாத்தினன்காண்சாழலோ. (2)

அருந்தவருக்காலின்கீழ றமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமது வெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண்சாழலோ. (20

திருச்சிற்றம்பலம்

திருப்பொன்னூசல்

ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

சீரார்பவளங்கான் முத்தங் கயிறாக
வேராரும்பொற்பலகை யேறியினிதமர்ந்து
நாராயணனறியா நாண்மலர்த்தாணாயடியேற்
கூராகத்தந்தருளுமுத்தர கோசமங்கை
யாராவமுதினருட்டா ளிணைபாடிப்
போரார்வேற்கண்மடவீர் பொன்னூசலாடாமோ (1)

மூன்றங்கிலங்கு நயனத்தன்மூவாத
வான்றங்குந்தேவர் களுங்காணாமலரடிக
டேன்றங்கித்தித்தித்தமு தூறித்தான்றெளிந்தங்

கூன்றங்கிநின் றுருக்கு முத்தரகோசமங்கை
கோன்றங்கிடை மருதுபாடிக்குலமஞ்ஞை
போன்றங்கனநடையீர் பொன்னூசலாடாமோ (2)

திருச்சிற்றம்பலம

அருட்பத்து

ஆசிரியவிருத்தம்.

சோதியேசுடரே சூழொளிவிளக்கே
  சுரிகுழற் பணைமுலைமடந்தை
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றாய்
  பங்கயந்தயனு மாலறியா
நீதியேசெல்வத் திருப்பெருந்துறையி
  னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியே னாதரித்தழைத்தா
  லதெந்துவே யென்றருளாயே (1)

திருந்துவார் பொழில்சூழ்திருப் பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணி யேசறுநினைந்திட்
  டென்னுடையெம் பிரானென்றென்
றிருந்தவாநினைந்தே யாதரித்தழைத்தா
  லலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலை புகுநெறியிதுகாண்
  போதராயென்றருளாயே (10)

திருச்சிற்றம்பலம்

அச்சோப்பதிகம்

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவாறார் பெறுவாரச்சோவே (1)

நெறியல்லா நெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள் சேராமேதிருவருளே சேரும்வண்ணங்
குறியொன்று மில்லாதகூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவாறார் பெறுவாரச்சோவே (2)

செம்மைநலமறியாத சித்தரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளிய வாறார்பெறுவாரச்சோவே, (9)

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் முற்றுப்பெற்றது.